பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

S.M. Fernando
OPTICIANS

SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
[Near Bank of Ceylon]
JAFFNA.

# உதயன்

விலை
ரூபா 3/50

கண்வைத்தியநிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாகக் கொடுப்பவர்கள்

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஞூ மாசி மீ 03 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 18 (15-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 1

# சட்டவிரோதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்க அரசு அவசர நடவடிக்கை

## சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி தகவல்

கொழும்பு, பெப்ரவரி. 15

சட்டவிரோதமான இராணுவக் குழுக்களையும், மற்றும் கண்காணிப்பு அமைப்புகளையும் நிராயுதபாணிகளாக்க அவசர நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு வகை செய்யும் விதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் சட்ட விதிகள் தயாரிக்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா நேற்று நடந்த சர்வகட்சி மாநாட்டில் தெரிவித்தார்.

இளைஞர்கள் சம்பந்தமாக ஆராய்ந்த ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் அரசு ஏற்றுக்கொண்ட 13 சிபார்சுகளில் இதுவும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது-

இளைஞர்கள் சம்பந்தமாக ஆராய்ந்த ஜனாதிபதிஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக நேற்றைய சர்வகட்சி மாநாடு நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த மாநாட்டுக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமை வகித்தார்.

தமிழ், முஸ்லிம் தரப்பில் மாநாட்டில் —

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் லீக், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ தேசிய விடுதலை முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளாகவும் பார்வையாளர்களாகவும் பலர் கலந்து கொண்டனர்.

ஆணைக்குழுவின் 13 சிபார்சுகள் குறித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவென சட்ட விதிகள் தயாரிக்கப்படும் என்று மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார்.

அரசு ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு சிபாரிசுகளை விரைந்துசெயற்படுத்தும்படி அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு

(6-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



பல நாள் கள்ளன் ஒரு நாளைக்கு பிடிபடுவான் எண்டது பொய்க்காது பாருங்கோ .....!

# நாட்டின் அமைதியை குலைக்க 'றோ' முயற்சி

## அமைச்சர் ரஞ்சன் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்ரவரி, 1

இந்தியப் புலனாய்வு நிறுவனம் 'றோ' இலங்கையின் ஸ்திரப்பாட்டைக் குலைக்க முயல்வதாக வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்னா குற்றம் சாட்டினார்.

நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

சதிகாரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இ... களில் சிலரிடம் கைத்துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் இருந்ததாகவும் அமைச்சர் சொன்னார்.

நேற்று நடந்த சர்வகட்சி மாநாட்டின் போது, அதில் கலந்து கொண்ட பிரதிநிதி ஒருவர், கொழும்பில் பெருந்தொகையான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளிக்கையில் தான் அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

''புலனாய்வு அறிக்கை கொடுத்த தகவல்களை கொண்டு இக்கைது நடந்தது. தமிழர்கள் மட்டுமல்ல, சி... களவர்களும் முஸ்லிம்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்க கூடும்''

—இப்படி அமைச்சர் விஜேரத்தினா மேலும் சொன்னார்.

### குற்றச்சாட்டு குறித்து இந்தியா அதிர்ச்சி!

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா 'றோ' மீது சுமத்திய குற்றச்சாட்டு குறித்து இந்தியா அதிர்ச்சி தெரிவித்திருக்கிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பிரதிநிதி ஒருவர், அமைச்சர் விஜேரத்னாவின் குற்றச்சாட்டு பற்றி அதிர்ச்சி தெரிவித்தார்.

அமைச்சரின் குற்றச்சாட்டுக்களில் எவ்வித ஆதாரமும் இல்லை என்றும் அந்த அதிகாரி வலியுறுத்தினார். (உ-எ)

## சுவாமி மலையில் சிறிமா வழிபாடு

சென்னை, பெப் 15

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று சுவாமி மலைக்குச் சென்று வழிபட்டார். பின்னர் அவர் தஞ்சையில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் சென்னை போய்ச் சேர்ந்தார். (ஒ-எ)

## வைத்திய பீட பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் நடைபெற உள்ளது.

ஏனைய துறை மாணவர்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## கம்பித் திருடனால் தொலைபேசிகள் செத்தன!

யாழ்ப்பாணம், பெப். 15

கடந்த சில தினங்களாக மிகச் சீராக இயங்கி வந்த யாழ் — கொழும்பு தொலைபேசிச் சேவை நேற்று பாவனையாளர்களைக் கைவிட்டது! அந்தக் கஷ்டத்தை ஏற்படுத்திய சூத்திரதாரி ஒரு தொலைபேசிக் கம்பித் திருடன்!!

நடந்தது இது தான்:

தொலைபேசிக் கம்பி திருடிப் பணம் தேடிய ஒரு திருடனுக்கு ஒரு 'ஐடியா' தோன்றியது. யாழ் கோட்டை, தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து பாவனையாளர்களின் தொலைபேசிகளுக்கு ''லைன்கள்'' வரும் பிரதான இடத்தில் கம்பிகளை அதிக எடையில் வெட்டி எடுக்கலாம்என எண்ணினான். செயற்பட்டான்.

அதன்பிரகாரம் பரிவர்த்தனை நிலையத்துக்கு மிக அருகில், பிரதான லைன் பகுதியில் பெரிய துண்டம் கம்பிகளை வெட்டி எடுத்தான்.

அதன் விளைவு —

நகரத்தில் இயங்கிய 120 தொலைபேசிகளும் செத்துவிட்டன!

பரிவர்த்தனை நிலையத்துக்கு வெளிமாகாணத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 200 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது!

கொழும்பு. பெப் 15

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் பாதுகாப்புப் படையினர் எடுத்த நடவடிக்கையில் இருநூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தத் தமிழ் இளைஞர்கள் பஸ் நிலையங்கள் விடுதிகள் வீடுகள் மற்றும் கோயில்களிலும் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர் என்றும்,

ஏ கே 47 துப்பாக்கிகள் வெடிமருந்துகள் ஆகியனவும் பாதுகாப்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது,

கைது செய்யப்பட்டவர்களில் பலர் நேற்று விடுதலை செய்யப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. (உ-எ)

## மூதூரிலிருந்து இந்திய படை விலகியது

கொழும்பு, பெப். 1

இந்தியப்படை திருகோணமலை மாவட்டம் மூதூரிலிருந்து நேற்று முற்றாக விலக்கிக்கொள்ளப்பட்டது. (உ

## தலைநகர் கொழும்பில் தமிழ் இளைஞரிடம் பணம் கறக்கும் மோசடி!

கொழும்பு, பெப். 15

தலைநகர் கொழும்பில் லொட்ஜுகளில் (விடுதிகளில்) தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களிடம் இருந்து பணம் கறக்கும் மோசடி நடவடிக்கை ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

இதுபற்றித் தெரிய வருவதாவது:-

வேலை வாய்ப்புக்காகவும் வெளி நாடுகளுக்குச் செல்லவுமென பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இப்போது கொழும்பில் விடுதி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் குழு இன்று மாலை சென்னைக்கு

கொழும்பு, பெப் 15

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் குழு இன்று மாலை கொழும்பிலிருந்து சென்னை பயணமாகின்றது.

இந்தக் குழுவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், திரு. லோறன்ஸ் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே புலிகள் குழுக்கள் சென்னை பயணமாகின்றது என்பது தெரிந்ததே. (உ)

## நேற்று இந்திய விமானம் சுவரில் முட்டிச் சிதறியது!

### 100 பேர் உயிரிழப்பு என அச்சம்

பெங்களூர், பெப் 15

இந்தியன் ஏயர்லைன்ஸுக்கு சொந்தமான எயர்பஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல் பெங்களூர் விமான நிலையத்தில் தரைஇறங்க முயன்றபோது கட்டடச் சுவர் ஒன்றில் மோதிச் சிதறியது.

சுமார் 100 பேர்வரையில் இவ் விபத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

விமானப் பயணிகள் பட்டியலின்படி 139 பயணிகளும் 94 சிறு குழந்தைகள் உட்பட) விமானச் சிப்பந்திகள் ஏழு பேரும் விபத்தின்போது விமானத்தில் இருந்தனர்.

இறந்தவர்களில் 5 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. இறந்தவர்களின் சடலங்கள் கருகிய நிலையில் காணப்பட்டன.

காயமடைந்த சிலர் பலத்த எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். 32 பேர்மட்டுமே உயிர் தப்பினர் என்று இன்னொரு செய்தி கூறியது. (ஒ-எ)

## கொழும்பு நோக்கிச் சென்ற யாழ்தேவி என்ஜினில் தீ! 4 மணி நேரம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, பெப். 15

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று புதன்கிழமை கொழும்பு நோக்கிச் சென்ற யாழ்தேவி ரயில், ''என்ஜின்'' கோளாறு காரணமாக பயணம் நான்கு மணி நேரம் தாமதமாகியது.

பரந்தனுக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் என்ஜினில் இருந்து டீசல் வெளியேறி தீப்பற்றியதால் ரயில் நிறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் தரித்து நின்ற 'என்ஜின்' ஒன்று வருவிக்கப்பட்டு கிளிநொச்சியில் இருந்து நண்பகல் 12.30 மணிக்கு யாழ்தேவி புறப்பட்டது.

தீப்பிடித்த என்ஜின் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

ரயிலில் வந்த பிரயாணிகளில் ஒரு பகுதியினர் பஸ் மூலம் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். ஏனையோர் ரயிலிலேயே தமது பிரயாணத்தைத் தொடர்ந்தனர். (ஒ-76)

## ப.உ. சண்முகமும் தி. மு. கவில்!

சென்னை, பெப் 15

எம். ஜி. ஆர் தலைமையில் ஒன்றுபட்டு இருந்த அ. தி. மு. க. தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ப. உ. சண்முகம் நேற்று தி. மு. க வில் சேர்ந்துகொண்டார். அ. தி. மு. க பிளவுபட்ட போது, ப. உ. சண்முகம் ஜானகி தலைமையிலான அ. தி. மு. க வில் இருந்தார்.

முதலமைச்சர் கருணாநிதி முன்னிலையில் தனது உறுப்பினர் பாரத்தை திரு. சண்முகம் நிரப்பிக் கொடுத்தார். (ஒ-எ)

## வாகன வரிப் பத்திரம்:

# எப்போதிருந்து அறவிடுவது? மாகாண, மத்திய அரசுகள் இழுபறி!

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்- மாவட்டத்தில் மோட்டார் வாகனங்களுக்குரிய வரி அனுமதிப்பத்திரங்களை (வாகன வருடாந்த லைசென்ஸ்) எந்த வருடத்தில் இருந்து வழங்குவது என்பது பற்றி மாகாண சபைக்கும், அரசுக்கும் இடையில் இழுபறிநிலை உருவாகியுள்ளதாக அறிய வந்துள்ளது.

யாழ் அரசாங்க செயலகத்தைச் சேர்ந்த மோட்டார் திணைக்களம் கடந்த 5 வருடங்களாக இயங்காது இருந்து வந்தது.

இப்போது மோட்டார் திணைக்களம் இறைவரித்திணைக்களம் என்பன இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கால சூழ்நிலைகள் காரணமாக யாழ் மாவட்டத்தில் வாகனங்களுக்கு வரி அனுமதிப்பத்திரங்கள் பெறப்படவில்லை.

புதிதாக வரி அனுமதிப் பத்திரம் வழங்கும் போது கடந்த காலத்தில் எவ்வளவு காலத்துக்கு பத்திரம் பெறவில்லையோ அவ்வளவு காலத்துக்கும் அபராதப் பணத்துடன் பணம் செலுத்த வேண்டும் என்று கொழும்பு மோட்டார் திணைக்களம் கூறியுள்ளது.

ஆனால் மாகாணசபையோ கடந்த காலங்களைக் கழித்து

(6-ம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

15 — 02 — 1990

வியாழக்கிழமை மாசி—03

சுபநேரம்:
8.03 முதல் 9.33 வரை

ராகுகாலம்:
2.33 முதல் 3.33 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## ★ ரூபா 200 இம்மாதம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப் 15

இருநூறு ரூபா சம்பள அதிகரிப்பை ஊழியர்களுக்கு வழங்காத திணைக்களங்கள் அதனை பெப்ரவரி மாதச் சம்பளத்துடன் வழங்க நடவ

(6-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு வயது றொடீசியன் றிட்ஜ்பாக் (Rhodesian Ridge Back) தாய் நாயும் இரண்டு மாதக் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு Mrs. S Yogarajah, Gul fcottage, Nunachchai Alaveddy North. (2520)

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாளிகள் (Chally) விற்பனைக்கு உள்ளது தொடர்பு: T. M. A பாய் 52/1, மணிக்கூட்டுவீதி, லிங்கம் கூல்பார் மேல்மாடி, யாழ்ப்பாணம். (2288)

Honda Reconditioned Chaly C-90 MD-90 MATE 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. Anton Enterprices 390, மெயின் வீதி, பஸ்ரியன் சந்தி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [2296]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline, Golden comet, Hisex பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா, அன் பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். (2491)

### தேவை

பெற்றோல் நிலையத்திற்கு 'பம்பர்' வேலையாட்கள் தேவை வயது 20-25 விரும்பத்தக்கது. உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளவும்:- தம்பிராசா பெற்றோல் நிலையம் கல்வியங்காடு சந்தை நல்லூர்யாழ்ப்பாணம். (1981)

பழைய பேப்பர்கள், புத்தகங்கள், சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும். தொடர்பு கொள்ளுங்கள், அண்ணா தொழிலகம் இணுவில். (சி/3844)

எமது ஸ்தாபனத்திற்கு நற்குணமுள்ள ரீ மேக்கர் வேலை செய்வதற்கான ஆள் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும் விபரங்கட்கு நேரில் வந்து சந்திக்கவும் தொடர்பு சாம்பவீஸ் கூல் அன் கோப்பிபார், 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [2291]

### தேவை

Radio T. V. திருத்துவதில் அனுபவமிக்கவர்கள் தேவை. நேரில் வரவும் T. V. Rathy 42, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [2298]

யாழ் நகரில் பிரபல மின்பொருள் விற்பனை ஸ்தாபனத்திற்கு ஆற்றல் மிக்க ஆண் காசாளர் தேவை. கல்வித் தகைமைகள்: க. பொ. த உயர்தரம் கணிதமும், ஆங்கில அறிவாற்றலும் தேவை. பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும். வயதெல்லை: 30—40 க்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுத் திகதி: 20-2-90. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: C/o 619, உதயன். (சி/3847)

### உடன் தேவை

பேக்கறி வேலையில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை. ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும், சோதிபேக்கறி பொற்பதி வீதி, கொக்குவில். (2524)

### றோனியோ

றோனியோ தட்டச்சு மற்றும் சகலஅச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்துகொள்ள தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (C/3831)

### பயிற்சிகள்

Radio T. V. Air Conditioning Refrigeration Wiring வெல்டிங் வைண்டிங் மோட்டர் மெக்கானிசம் பிளம்பிங் Typing Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. [2299]

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 21-02-1990 திங்கள், புதன், வெள்ளி நாட்களில் மாலை 4மணி — 5/30 மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (11803)

### கல்வி

Spoken English உடனடியாக ஆரம்பிக்கப்படுகிறது. Adults (O/L, A/L) சனி, ஞாயிறு காலை 10 00 மாலை 4.00 Children (Year 6-9) சனி, ஞாயிறு காலை 8.00 மாலை 2.30) வகுப்புகள் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் S. ஜெயராஜா, கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 204, மானிப்பாய் றோட் ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2538)

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3828)


### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1990 க்கு, க.பொ.த. (சா/த) சித்தியடைந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (1974)

### போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் திரு. சின்னத்துரை சண்முகராசா (அப்பையா)

அன்னை மடியில்: 1 - 12 - 1936

ஆண்டவன் அடியில்: 16 - 01 - 1990

திதி: 15. 02. 1990

ஆலமரமென நீயிருந்தாய் அதனாற்
காலமெலாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
காலனவன் பாசக் கயிற்றினாலே
பாலைவன மானதே எம் வாழ்வு

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (2289)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### உயிரியல் தொழில் நுட்பத்திற்காக திலீபன் ஆய்வு மாணவர் ஆதரவூதியம்

பட்டதாரிகள்/பட்டப்பின் தகைமைகளைக் கொண்டுள்ளோர் தாவர இழைய வளர்ப்பு பரம்பரை அலகுகள் பொறிமுறை ஆகியவற்றில் ஆய்வுத் திட்டமொன்றுடன் மேற்குறித்த ஆய்வு மாணவர் ஆதரவூதியத்திற்கு விண்ணப்பிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். அவர்கள் தமது கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் உட்படச் சொந்த விபரங்களையும் அனுப்புதல் வேண்டும். நேர்முகப்பரீட்சை ஒன்றின் பின்னர் மிகப் பொருத்தமான விண்ணப்பதாரிக்குஇவ்வாய்வு மாணவர் ஆதரவூதியம் அளிக்கப்படும் மாதாந்தப்படியாக 2500/- ரூபா வழங்கப்படும்.

இவ்வாய்வு மாணவர் ஆதரவூதியத்திற்கான காலம் ஓராண்டாவதுடன் மீள விண்ணப்பிப்பதன் மூலம் நீடித்துக் கொள்ளமுடியும் ஆய்வுச் செயற்திட்டம் தொடர்ந்து திருப்திகரமாக நடைபெறாவிட்டால் அல்லது விண்ணப்பதாரியின் நடத்தை திருப்திகரமாக இல்லா விட்டால் இவ்வாய்வு மாணவர் ஆதர ஆதியம் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்.

**விண்ணப்பங்கள் முடிவுத் தேதி: 1990 - 02 - 28**

பதிவாளர்.

யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 – 02 – 10 (C/3858)

### ஆங்கில புத்தகம்

அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க, பரீட்சைகளுக்குத் தோற்ற வீட்டில் இருந்தபடியே மிகசுலபமாக கற்கக்கூடிய முறையில் எழுதப்பட்ட புத்தகம் தான் Basic Grammar and Spoken Practical வாங்கியோர் பலராலும் பாராட்டப் பெற்றது கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1960)

### கருத்தரங்கு

''பிரான்சிய புரட்சி' என்ற தலைப்பில் யாழ் - பல்கலைக்கழக மெய்யியல் கழகம் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பி. ப 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

கருத்தரங்கில் வரலாற்றுத் துறை விரிவுரையாளர் திரு. சத்தியசீலன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (உ-9)


இவ்வார சஞ்சீவியுடன்
சஞ்சிகைக்கு மேலதிகமாக
16 பக்க கையடக்கமான தனி இதழ்

★ இலவச இணைப்பு ★

இவ்வார இலவச இணைப்பு
"டிட்பிட்ஸ்"
[துணுக்குக் குவியல்]

உங்கள் பிரதிகளுக்கு இப்போதே முந்துங்கள்!
இப்போதே உங்கள் ஏஜெண்டுகளிடம்
பதிவு செய்து கொள்ளுங்கள்!!

அவ்வப்போது சஞ்சீவி, சஞ்சீவி சஞ்சிகை
ஆகியவற்றுடன் வெளியாகும்
16 பக்க கையடக்கமான
இலவச இணைப்புகளை
வாங்கி பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்
பயனுள்ள தகவல்களின் களஞ்சியம் அது


## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

### 1. 24ஸ்ரீ 9364 - இசுசு லொறிக்கு பொடி அடித்தலுக்கான கேள்வி கோரல்

மேற்படி லொறிக்கு அரை பொடி அடித்தலுக்கான கேள்வி விண்ணப்பம் தகுதி வாய்ந்த பொடி அமைப்பாளர்களிடமிருந்து கோரப்படுகின்றது. முன் பக்க தகரவேலை முற்றாகத் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்க வேலை நேரத்தில் லொறியைப் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 28- 02- 90 ஆகும்.

### 2. வெற்றுச் சாக்கு விற்பனை

சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் வரை விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்க விருப்புவோர் சங்க காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு உரிய படிவத்தைப் பெற்று 28- 02- 90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

### 3. வெற்று தகர பரல் (45 கலன்) விற்பனை

சங்கத்தினால் பாவிக்கப்பட்டு கழிக்கப்பட்ட 100 வெற்று தகர பரல்கள் விற்பனைக்குண்டு. காரியாலய வேலை நேரத்தில் பார்வையிடலாம். 28- 02- 90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

— **பொது முகாமையாளர்**
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி/3386)

## அறிவித்தல்

மண்டைதீவு புனித பேதுருவானவர் மகளிர் மன்ற கட்டட நிதிக்கான சீட்டிழுப்பு 4 - 2 - 1990 இல் அதிஷ்டம் பார்க்கப்பட்டது.

1 ஆவது பரிசு: செ. யஸ்ரின்
3 ம் வட்டாரம், எழுவைதீவு.
இல: 1793

2 ஆவது பரிசு: S. றீற்றா
பண்டத்தரிப்பு
இல: 2033

3 ஆவது பரிசு: சு. ரஜீவ்தா
1 ம் வட்டாரம், மண்டைதீவு.
இல: 2531

### ஆறுதல் பரிசு

1 ஆவது பரிசு: S. சத்தியசீலன்
99/3 ஸ்ரேஷன் லேன், யாழ்ப்பாணம்.
இல: 4404

2 ஆவது பரிசு: பபிர்திரா
4 ம் வட்டாரம், மண்டைதீவு.
இல: 919

3 ஆவது பரிசு: சு. கலைரிலா
இணுவில் கிழக்கு, இணுவில்.
இல: 28

மேற்படி பரிசுக்குரியவர்கள் மண்டைதீவு பங்குத் தந்தையோடு தொடர்புகொள்ளவும்.

**பி. பவளசிறி**
தலைவி, மகளிர். மன்றம்

(2534)

## அறிவித்தல்

சிங்களச் சட்டத்தால் 1963 இறுதி வரை பாதிக்கப்பட்டவர்கள், பொது நிர்வாக அமைச்சுக்கு இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கழகம் வேண்டுகிறது. படிவங்களுக்கும் மற்றும் விபரங்களுக்கும், தலைவர், சி. நவரத்தினம், 165, மின்சார நிலைய வீதி, ஸ்ரீகாந் புத்தகசாலை, அல்லது செயலாளர், மு. மகாலிங்கம், 24, சிவப்பிரகாசம் வீதி, ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும்.

**வேலை இழந்தோர் கழகம்.**

(2537)

## T. V. TRAVELS & TOURIST

## முக்கிய அறிவித்தல்

இம்மாதம் 13ம், 15ம் திகதிகளில் சவூதி, குவைற் நாட்டிற்கு செல்லவிருந்தவர்களின் பயணம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் நாடுகளுக்கான பயணத் திகதி இம்மாத முடிவிற்குள் அறிவிக்கப்படும்.

✶ சைப்பான் (Saipan)

மேற்காணும் நாட்டிற்கு எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்களுக்கு பயணம் செய்யும் திகதி இம்மாத முடிவில் அறிவிக்கப்படும்.

[Front of Railway Station]
Brown Road
KOKUVIL, JAFFNA.

[சி-3840]

## அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள்
பிராந்திய திணைக்களம் யாழ்ப்பாணம்.

### 1990 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உளள சுகாதார நிறுவனங்கட்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருட்களை வழங்கக் கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருட்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்
4. மரத்தளபாடங்கள்
5. உருக்குத் தளபாடங்கள்
6. பிளாஸ்டிக் பொருட்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன)
7. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருட்கள், ஆமைப்பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி கோடாரி முதலியவை.
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
9. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறுகட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டிடத் திருத்தத்திற்கு அவசியமான பொருட்கள்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர் டியூப் உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சன சமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவுசெய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க் காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூ. 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 22 - 02 - 90 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1990 ஆண்டிற்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி
**ந. கனகசபை**
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய திணைக்களம்,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்,
12 பெப்ரவரி 90. [சி-3382]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது.

**பொருள்:**

ஒருவர்முன் நின்று இரப்பவர் அந்த இரத்தலை மேற்கொள்வது, உள்ளதை இல்லை என்று ஒளித்து கூறாத நன்மக்கள் உலகத்தில் இருப்பதால்தான்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
15-02-1990    த. பெ.    இலக்கம் : 23

# தடுப்பாரில்லாத கொலைகள்!

பழுதடைந்த அல்லது காலந்தப்பிய உணவுப் பொருள்களை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. விற்பனை நிலையங்கள், உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிலகங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றிலிருந்து கைப்பற்றப்பட்டு, இரசாயனப் பகுப்பாய்வு செய்யப்பட்ட உணவுப் பொருள்களில் ஐம்பது சதவீதமானவை உண்பதற்கு தகுதியற்றவை எனக் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் விளைவே சுகாதார அமைச்சின் புதிய எச்சரிக்கை.

அரசாங்கத்தின் சுகாதார அமைச்சும், உணவு அமைச்சும் உணவுப் பொருள் தயாரிப்போருக்கும், உணவுச் சாலைகளுக்கும், பலசரக்கு மாளிகைகளுக்கும் இவ்வாறு அடிக்கடி எச்சரிக்கைகளை விடுவது வழக்கம். ஆனால் அந்த எச்சரிக்கைகள் உரிய, எதிர்பார்க்கப்படும் விளைவுகளைத் தந்ததாக இல்லை. பாவனையாளர்கள் தொடர்ந்தும் உண்பதற்குத் தகுதியற்ற உணவுப் பொருள்களையே வாங்கி உட்கொள்கிறார்கள். கலப்படம் செய்யப்பட்டவற்றையே கடைகளில் வாங்க வேண்டி உள்ளது.

கோப்பித்தூள், மிளகாய்த் தூள், வினாகிரி, அறோட்டுமா பழச்சாறுகள் என்பன கலப்படம் செய்யப்பட்டும், பாவிப்புக்கு உதாவாமல் பழுதடைந்த பின்னரும் விற்கப்படுவதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆனால் நடைமுறையில் அரிசி முதல் பருப்பு வரை, பால் முதல் பால்மா வரை, எண்ணெய் தொடக்கம் டின் மீன் வரை எண்ணிலடங்காத உணவுப் பொருள்களும், பண்டங்களும் கலப்படம் செய்யப்பட்டும், பழுதடைந்த பின்னருமே பாவனையாளர் கை சேர்கின்றன.

உயர்ந்து நிற்கும் வாழ்க்கைச் செலவில், அதிகரித்த விலைகளில் காசைக்கொட்டி கரியாக்கும் அநியாயம் நடக்கிறது. பணத்தைக் கொடுத்து வியாதிகளை வாங்கும் அவலம் தொடர்கிறது. பாவனைக்கு உகந்த காலம் தப்பிய மருந்துவகைகள் மற்றும் இறக்குமதி உணவுப் பொருள்கள் மேன்மேலும் நோயாளர்கள் எண்ணிக்கையை நாளாந்தம் அதிகரிக்கின்றன.

கலப்படம், பழுதடைந்த பொருள்களை விற்கும் மோசடி என்பன சமூகத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்துவன. ஒரு விதத்தில் மக்களை நஞ்சூட்டிக் கொல்வதற்கு ஒப்பானவை. ஆனால் இந்தக் கொலைக் குற்றங்களைத் தக்க முறையில் தடுப்பதில் அரச இயந்திரம் போதிய பலம் பொருந்தியதாக இல்லை. அது இயற்றும் சட்டங்கள், சட்டவிதிகள், ஒழுங்கு விதிகள் என்பன வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக இல்லை. மக்களைக் காப்பாற்றக்கூடிய வீரியம் நிறைந்த கேடயங்களாக உருவெடுக்க முடியவில்லை.

இந்த இயலாத் தன்மைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. அரசு ஆக்கும் சட்டங்கள், விதிகளை உரிய முறையில் அதன் அதிகாரிகள், செயற்படுத்துவதில்லை என்பது ஒன்று. அவர்களில் பலரும் லஞ்சம், ஊழல் என்பவற்றின் காவலர்களாக இருந்து கொண்டு, மோசடி செய்பவர்களுக்குத் துணை போகிறார்கள். வேலியே பயிரை மேயும் வெட்கக்கேடு!

மனிதாபிமானம், நியாயம், நல்ல சிந்தை என்ற எதுவுமே இல்லாத உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மலிந்து போயிருப்பது மக்கள் நாளாந்தம் நஞ்சூட்டிக் ''கொலை'' செய்யப்படுவதற்கு இரண்டாவது காரணம்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் மக்களில் ஒரு பகுதியினர். உற்பத்தியாளர்கள், வர்த்தகர்களும் மக்களில் இன்னொரு பிரிவினர். பாவனையாளர்கள் மக்களில் அடுத்த வகையினர்.

இங்கே முதல் இரண்டு கூட்டத்தினரும் சேர்ந்து பெரும்பான்மையான மக்கள் கூட்டத்தை மோசடி செய்கிறார்கள்: அவர்களைக் ''கொலை'' செய்கிறார்கள்; அநீதி விளைவிக்கிறார்கள். இது சமூக விரோதம் மட்டுமன்றி, பெரும்பான்மையினர் மீது சிறுபான்மையினர் அக்கிரமம் புரியும் சனநாயக விரோதமும் ஆகும்.

இந்தச் சனநாயக விரோதத்தையும். மக்கள் ''கொலை''யையும் தடுக்க முடியாமல் மக்களின் பிரதிநிதிகள் என்னும் மக்களில் ஒரு கூட்டத்தினர் (நான்காமவர்) ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களின் இயலாத் தன்மை இங்கே அப்பட்டமாகப் புலப்படுகிறது.

ஒரே மனித கூட்டத்தில் நான்கு வகையினர். அவர்களில் இரு சாராரின் மாசுபடிந்த மனங்களால் மற்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்படுபவரும் மனிதரே என்று மோசடி செய்பவர் உணரும் வரை ஆட்சி பீடத்தில் உள்ளவர் தடுக்க வலுவின்றிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தானா?

## மாகாணசபைக்கு புதிய உறுப்பினர்

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் புதிய யாழ் உறுப்பினராக திரு. மாணிக்கம் வசீகரன் (ஈ.பி.ஆர். எல். எவ்) நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சபை அதன் தலைவர் திரு. பொன்ராம் இராஜகாரியர் தலைமையில் கூடிய போது புதிய உறுப்பினர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அண்மையில் கொலைசெய்யப்பட்ட முன்னாள் காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம், மாகாண சபை உறுப்பினர் திரு. ஜோர்ஜ் தவராசா தம்பிராசா (ஈ.பி. ஆர். எல். எவ்) ஆகியோருக்கும் சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் கண்ணீர் சிந்தியவாறு அழுது அழுது திரு. ஜோர்ஜ் தவராசா தம்பிராசாவின் மறைவு குறித்து தனது அஞ்சலியைச் செலுத்தினார். (உ-150)

# யாழ். பல்கலைக்கழகத்தில் 'கடற்றொழிலியல்' துறை

## புதிதாக ஆரம்பிக்க முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பல்கலைக்கழகத்தில் 'கடற்றொழியியல்' என்னும் புதிய துறை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரும் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்கு இதுவரை எந்த விதமான ஆய்வுகளோ, அபிவிருத்தி நடைமுறைகளோ மேற்கொள்ளப்படவில்லை.

இந்தத்துறையில் நவீன அணுகுமுறைகளை அறிமுகம் செய்யும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இத்துறை ஆரம்பிக்கப்படுகிறது.

இத்துறை விஞ்ஞானபீடத்தின் கீழ் முதலில் இயங்கும். இத்துறை ஆரம்பிப்பிப்பதற்கான அனுமதி பல்கலைக்கழக ஆணைக்குழுவிடம் பெறப்படவிருக்கிறது.

முதலில் இதனை ஒரு துறையாக ஆரம்பித்து காலக்கிரமத்தில் பீடமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (உ-3)

## மீண்டும் பஸ் சேவை

முல்லைத்தீவு பெப் 15

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் மக்கள்மீளக்குடியமரச்சென்றதையடுத்து வடபிராந்திய போக்குவரத்து சபையின் முல்லைத்தீவுச்சாலைமீண்டும்பஸ் சேவைகளை ஆரம்பித்துள்ளது.

தனியார் போக்குவரத்து சங்கத்தினரும் சேவைகளைத் தொடக்கியுள்ளனர். (ஒ-92)

## இனவாத உணர்வைப் போக்க பாடநூல்களைத் திருத்த வேண்டும்

### இளைஞர் பற்றிய ஆணைக்குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம் பெப் 15

''வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்ட இளைஞர் அமைதியின்மை இன மோதலுக்கு நேரடியாகத் துணை புரிந்தது இளைஞர்கள் மத்தியில் உள்ள இனவாதச் சிந்தனைகளை இல்லாதொழிப்பது அவசியம். இதைச் செய்வதற்கு பல பாடநூல்களை குறிப்பாக இனவாத உணர்வை வழக்கமாகப் பரப்பும் வரலாற்றுப் பாடநூல்களைத் திருத்தி எழுத வேண்டும்.''

கடந்த ஆண்டின் இறுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்த இளைஞர் பற்றிய ஜனாதிபதிக் கமிஷனுக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன் சமர்ப்பித்த மகஜரில் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மகஜர் பொதுவாக இளைஞர் மத்தியிலும் குறிப்பாக தமிழ் இளைஞர் மத்தியிலுமான விரக்திகள், எதிர்பார்ப்புகள் ஆகியன பற்றி விபரமாக எடுத்துக் கூறியது. (க)

## அதிகாரிகள் தயார்! வியாபாரிகள் தயாரில்லை!!

யாழ். செயலகத்தில் தராசுகளுக்கு முத்திரையிடும் வேலைகளைச் செய்வதற்காக கடந்த இரு நாட்களாக அதிகாரிகள் காத்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை எவரும் முத்திரையிடுவதற்கு வரவில்லையாம்.

கடந்த பல வருடங்களாக வட பகுதியில் தராசுகளுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறவில்லை. ஆனால் இவ்வருடம் தராசுகளுக்கு முத்திரையிடும் வேலைகளைச் செய்ய அதிகாரிகள் காத்திருக்கிறார்கள்.

முத்திரையிடும் வேலைகள் யாழ். செயலகத்திற்கு முன்பாக பழைய கச்சேரி கட்டிடத்தில் மேற்கொள்ள ஏற்பாடாகியுள்ளது.

வட பகுதியில் பொலீஸ், நீதி மன்றம் போன்ற சட்ட ஒழுங்கு நிறுவனங்கள் இயங்காமையினாலேயே இவ்வாறு தராசுகளுக்கு முத்திரையிடும் விடயத்தில் வியாபாரிகள் அசமந்தம் காட்டி வருகின்றனர் என சொல்லப்படுகிறது. (உ-9)

## 22 க்கு முன் விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம், பெப் 15

யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சையில் தோற்ற விரும்பும் 1989 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-3)

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், பெப். 15

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 155-ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 27-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படும். (க)

## தொலைபேசி துண்டிப்புக்கு மின்சாரசபையினர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், பெப். 15

வடமாகாண மின்சார சபை அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த வெளிமாவட்டங்களுக்கான நேரடித் தொலைபேசி வசதி துண்டிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவையாக விளங்கும் மின்சார சபையின் பணிகள் இந்த தொலைபேசி துண்டிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த வெளிமாவட்டங்களுக்கான நேரடித் தொலைபேசி வாபஸ் பெறப்பட்டு உள்ளூர் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொலைபேசி மூலம் யாழ் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஊடாக வெளிமாவட்டங்களுக்கான அழைப்புகளை பதிவு செய்து பெற்றுக் கொள்ளமுடியும். (உ-3)

## கீழ்மட்ட மக்களின் மேன்மையை விளக்குவன டானியல் நூல்கள்

### கலாநிதி மௌனகுரு உரை

குருநகர், பெப் 15

''டானியல் பன்முக ஆளுமை உடையவர். அவருடைய போராட்டத்தன்மை, படைப்பாற்றல் இரண்டையுமே அவருடைய படைப்புகளில் நாம் காணமுடியும். தமிழ் இலக்கிய வரலாற்றில் டானியலின் நூல்கள் கீழ்மட்ட மக்களின் மேன்மையை முதன்மைப் படுத்தும் போக்கில் எழுதப்பட்டவை ஆகும்.''

கே. டானியலின் ''குறுநாவல்கள்'' வெளியீட்டில் ஆய்வுரை நிகழ்த்திய கலாநிதி மௌனகுரு மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த இவ்விழாவிற்குத் தலைமை வகித்த தமிழ் மன்றத் தலைவர் திரு. பிறிம்ராஜ் ரவிச்சந்திரா, டானியலின் படைப்புகள் நைந்துபோன பெரும் பகுதி மக்களின் யதார்த்த வாழ்க்கையைக் [illegible] செழுமையுடன் படம் பிடித்துக் காட்டுகின்றன என்று கூறினார்.

நூலை வெளியிட்டு உரை நிகழ்த்திய திரு. வி. பி. சிவநாதன் எம். ஏ. 'டானியல் ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் சார்பாக இலக்கியம் படைத்தவர்' என்று குறிப்பிட்டார்.

''டானியலின் இலக்கியப் பண்பு உலகளாவியது என்பதை இந்தக் குறுநாவல் தொகுதி தொட்டுக்காட்டுகின்றது'' என்று திரு. சி. சந்திரபோஸ் பி. ஏ. தமது ஆய்வுரையின் போது கூறினார்.

ஜனாப் ஏ. சி. எம். இக்பால், திரு. சி. சிவலிங்கராசா எம். ஏ. ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

நூலின் முதற்பிரதியை மணிவிழா எழுத்தாளர் சொக்கன் அவர்களும் சிறப்புப் பிரதிகளை திருமதி விமலா பாலசுந்தரம் பி. ஏ. திருமதி விஜயலட்சுமி சிவசந்திரன் எம். ஏ. ஆகியோரும் [illegible]

[illegible] தாஸ் நன்றியுரையை நிகழ்த்தினார். (க-51)

## கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் புதிய மாணவரைச் சேர்க்க நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப். 15

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு நாலாயிரம் மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் தேர்[ந்]தெடுக்கப்பட்டு 25 பயி[ற்சி] நெறிகளுக்கு அனுமதிக்[கப்] படுவார்கள்.

எதிர்வரும் 28-ஆம் திக[தி] வரை நேர்முகப் பரீட்சைக[ள்] நடைபெறும் என்றும் மார்[ச்] ஐந்தாம் திகதி வகுப்புக[ள்] ஆரம்பமாகும் என்றும் தெ[ரி]விக்கப்பட்டது. (உ-3)

## சர்வதேச மகளிர் தினம்; நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம் பெப். 15

யாழ்-மாவட்டத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களின் ஆதரவில் ''சர்வதேச மகளிர் தினம்'' அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஆதரவில் இயங்கும் மகளிர் அமைப்புக்களே இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

மகளிர் தினத்தை ஒட்டி சிறப்பு விழா ஒன்றும் நடை[பெ]றவிருக்கிறது. சிறுகதை[,] ஆங்கில தமிழ் பேச்சு[ப்] போட்டிகள், பூ, ஐசி[ங்] செய்தல், மணமகள் அல[ங்]காரப் போட்டிகள் ஆகி[ய]னவும் ஒழுங்கு செய்யப்ப[ட்]டுள்ளன.

மகளிர் தின விழாசம்ப[ந்]தமான ஆலோசனைக் கூட்ட[ம்] மொன்று எதிர்வரும் 17-ஆ[ம்] திகதி யாழ்ப்பாணத்தி[ல்] நடைபெறவிருக்கிறது.

## யாழ். பாடசாலைகளிடையே பொது அறிவுப் போட்டி!

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்-மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் பொது அறிவுப்போட்டி ஒன்றை யாழ்: றோட்டறிக் கழகம் நடத்தவிருக்கிறது. பேராசிரியர் ஹூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

நொக்கவுட் முறையில் நடத்தப்படவிருக்கும் இப்போட்டியில் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் அணிகளாகப் பங்குபற்ற முடியும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைபெறும் இப்போட்டிக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு றோட்டறிக் கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (உ-3)

## முல்லைத்தீவு பாடசாலைக்கு புதிய கட்டடம்

எட்டு லட்சம் ரூபா செலவில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்துக்கு இரண்டுமாடிக் கட்டடம் ஒன்று கட்டும் வேலைகள் ஆரம்பித்து விட்டன.

வித்தியாலய அபிவிருத்திச் சபையும், அதிபரும் எடுத்த முயற்சியை அடுத்தே கல்வித் திணைக்களம் கட்டட வேலைகளை ஆரம்பித்துள்ளது. (ஒ-92)

## பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை பெப் 15

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாசத்தால் நடத்தப்பட்ட கல்வி, கலை, கலாசாரப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 18-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் சமாசத் தலைவர் திரு. கோ. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

## விபத்து

பச்சிலைப்பள்ளி, பெப். 15

கடந்த ஞாயிற்றுக்கிழமை நுணாவில் 190 மைலுக்கு அண்மையில் உழவு யந்திரமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதால் மோட்டார் சைக்கிளில் வந்தவர் காயங்களுக்குள்ளானார்,

நீர்வேலியைச் சேர்ந்த மா. நடராசா (வயது 50) என்பவரே காயத்திற்குள்ளானவர் ஆவார். (அ-117)

# விடுதலைப் போராட்டத்துக்கு பலமாக இருப்பது கல்வியே

### வவுனியாப் பொறுப்பாளர் தினேஷ் கருத்து

வவுனியா, பெப். 15

''எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருப்பது கல்வி. மக்களுக்குத் தெளிவையும், உண்மையை அறிந்து கொள்ளும் ஆற்றலையும் அளிக்கும் கல்வியின் வளர்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் என்ற முத்தரப்பினரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

—இவ்வாறு விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தினேஷ் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகள் குறித்து உதயனுக்கு அளித்த விசேட பேட்டியின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

''அடக்குமுறைகள், ஆதிக்க சக்தி, இனவாத சக்திகள் என்பன எமது விடுதலைப் போராட்டத்தை திட்டமிட்டு அழிக்க முயன்றபோது அவற்றை எதிர்த்து நின்று முறியடித்தவை மக்களின் ஒன்றுபட்ட தெளிவான சிந்தனையும் சக்தியுமே ஆகும்.

இத்தகைய தெளிவையும் சிந்தனைத் திறனையும் வளரும் சமுதாயத்தினரான மாணவர்களிடையே வளர்க்க வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் ஆகிய தரப்பினரிடையே கல்வி வளர்ச்சி, அறிவுத் தெளிவு என்பன குறித்து விளக்கமளிப்பதுடன் இவற்றின் வளர்ச்சிக்கான ஒன்றுபட்ட செயற்பாடுகளைத் தாங்கள் ஊக்குவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

#### சூழ்நிலையால் கல்வி பாதிப்பு

இன்று இலங்கை மக்கள் 87 வீதமானோர் கல்வி அறிவுடையவர்கள் என்று புள்ளிவிபர மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆனால் எமது வவுனியா பிரதேசத்திற்கு அது பொருத்தமில்லை.

இங்கு நிலவிய இராணுவச் சூழ்நிலைகள் காரணமாக மாணவர்கள் உளவியல் உடல் ரீதியாகபாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் ஆசிரியர்களும் இந்த இராணுவச் சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டனர். ஆனால் இருபகுதியினரும் கல்வியில் தமது பூரணமான கவனத்தை செலுத்த முடியாது போயிற்று.

அடக்குமுறை வடிவங்களுக்கு எதிராக மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றார்கள் ஆகியோர் ஒன்றுபட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இதன் ஓர் அம்சமாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளது

இதன் மூலம் எமது பகுதியில் கல்வித்துறையில் உள்ள வளங்களைக் கட்டுக் கோப்புடனும் ஆகக் கூடிய அளவிலும் பயன்படுத்தி வழிநடத்த உள்ளோம் — என்றார். (ஒ-164)

## சமய செய்திகளில்

### கொடியேற்றம்

சேமமடு, பெப். 15

வவுனியா, பம்பைமடு வைகாடி கூழாங்குளம் சித்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் 23-ஆம் திகதி நடைபெறும். (க-37)

### நினைவில் இன்று

15-02-1990

● விஞ்ஞானி கலிலியோ பிறந்த தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானம்

திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தின் பெயரைச் சொல்லி சிலர் தவறான வழியில் பணம் வசூலித்து வருவதாக நாம் அறிகின்றோம். திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தின் பெயரால் திருப்பணிக்கோ, உற்சவங்களுக்கோ, வேறு தேவைகளுக்கோ பணம் வசூலிப்பதற்கு எவருக்கும் எம்மால் அனுமதிஅளிக்கப்படவில்லை. எனவே திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்திற்கு நிதியுதவி செய்ய விரும்பும் அன்பர்கள்நேரடியாக திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்துடன்தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

திருக்கேதீஸ்வர
ஆலயத் திருப்பணிச் சபை,
திருக்கேதீஸ்வரம்.

(C/3821)


## முழுமையான 31வது நாள்

தோற்றம்: 03 ★ 11 ★ 1926



மறைவு: 16 ★ 01 ★ 1990

**திரு. கணபதிப்பிள்ளை சின்னத்துரை**
(குட்லக் சைக்கிள் சொப் உரிமையாளரும், முன்னாள் கிராம சபை உறுப்பினரும்)

எம் வாழ்விற்கு ஒளி தந்த
எமது இனிய தந்தையே,
உங்களை இழந்து நாம்
துயர இருளில் மூழ்கித் தவிக்கிறோம்.
மண்ணில் எமக்கு வழிகாட்டியாய் இருந்ததுபோல்
விண்ணில் இருந்தும் வழிகாட்ட வேண்டுகிறோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை
இறைஞ்சி நிற்கும்:
**குடும்பத்தினர்.**

மானிப்பாய் வீதி,
ஆணைக்கோட்டை. (1977)

வடபிராந்திய மின்சார சபைக்கு

# அலுவலகம் கட்ட ரு.2கோடி80லட்சம்: ஆனால் காணி இன்றி நிதிதேக்கம்

யாழ்ப்பாணம், பெப். 15
இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் அலுவலகத்தைஅமைப்பதற்குஇரண்டு கோடி 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தும், காணி இல்லாததன் காரணத்தால் கடந்த நான்கு வருடங்களாக இந்த நிதி பாவிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது.

இந்த நிதியில் விடுதி வசதிகளுடன் கூடிய யாழ் பிரிவு மின் அத்தியட்சகர் அலுவலகம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

மேற்படி கட்டடங்களை அமைப்பதற்கு யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுகளில் நன்னீர் வசதியுடன் கூடிய மேட்டு நிலக்காணி தேவைப்படுவதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (10)

## குறுநாவல் அறிமுக விழா

குருநகர், பெப். 15
கவிஞர் 'வளவை வளவன்' எழுதிய 'சங்கரன்' குறுநாவல் அறிமுக விழா 18ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. க. கதிரேசு தலைமையில் நடைபெறும்.

'தியாகி இரத்தினம்' சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் திரு.செங்கை ஆழியான், திரு. விவேக், திரு. க. இராசதுரை, திரு. ஏ. அருள்நேசன், திரு. எஸ்.ஜே. ஜெயக்குமார்: திரு. வரணியூர் சபா, திரு. எஸ். தவநாயகம் ஆகியோர் நூல் ஆய்வுகளை நிகழ்த்துவார்கள். ([illegible])

## 9 ஆயிரம் சந்தேகநபர்கள் காவலில் உள்ளனர்

நாட்டில் தற்சமயம் 6 ஆயிரத்து 757 சந்தேக நபர்கள் தடுப்பு முகாம்களிலும் 2 ஆயிரத்து 544 பேர் புனர்வாழ்வு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்தவெள்ளி அரசு வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

பூஸா: 2,226, வெலிசறை: 50, பல்லக்கெல: 591, புணானை: 1055, பெலவத்தை: 1,184, விசேட அதிரடிப்படை: 1,270, சிறைச்சாலை:391, பல்கலைக்கழகம்: 33, ஏனையஇடங்களில்: 17—மொத்தம்:6,757.

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு;

கெமுனுபுர: 178, கலப்பலுவலை: 218, ரத்மலான:288, குளியாப்பிட்டி: 300, பொல்கொல்ல 291, விசேட அதிரடிப் படை: 137, அம்பாறை: 379,குருணாகல: 77,பதுளை: 130, ரத்னாவளி யாத்ரீகர் விடுதி: 211—

மொத்தம் — 2544. (உ-எ)

## உயிர்த்துடிப்பான சமுதாயம் உருவாக மக்களுக்கு சமயப்பற்று வேண்டும்

### நல்லூர் உப அரச அதிபர் உரை

''இன்றைய சூழ்நிலையில் மனிதகுலத்துக்குச் சமயப்பற்று மிக இன்றியமையாதது. உயிர்த்துடிப்பான சமுதாயம் உருவாகவேண்டுமானால் சமயப்பற்று மக்களிடம் ஏற்படவேண்டும்.

யாழ் சைவத் தொண்டர் நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இவ்வாறு கூறினார்.

திருநெல்வேலி வடக்கில் அமைப்பாளர் திரு. இ. சுவாமிநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில்:-

சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள் துயருற்ற போது ஏனைய மதத்தவர்கள் மனமுவந்து உதவிகள் செய்தார்கள். எமது சமயத்தைச் சேர்ந்தவர்கள் எம்மதத்தவரை ஏன் காப்பாற்ற முன்வரக்கூடாது?

சமயத்தின் கொள்கைகள் மனித குலத்தின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றன. சைவத்தொண்டர் நிலையம் இன்று ஆரம்பிப்பது முன்மாதிரியான பெருமுயற்சியாகும். இது போன்று பல சைவத்தொண்டர் நிலையங்கள், இந்து இளைஞர் மன்றங்கள் உருவாக வேண்டும் என்று கூறினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஆசியுரையாற்றுகையில், ''சைவ மக்கள், பாரம்பரிய சிவசின்னங்களை அணிய வேண்டும். சைவப்பணி செய்யும்போது சிவசின்னங்களை அணிந்தே சமயத் தொண்டுகள் செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. தெ. ரதீஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் துணைச்செயலாளரும், திரு. சிவ. ஆறுமுகஸ்சுவாமி, மாவட்ட உதவிச் சாரணர் ஆணையாளர் திரு. இ. தவகோபால், பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் ஆகியோரும் உட்பட வேறுபலரும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள் (க-30)

## உடுவில் கொத்தணி போட்டிகள்

உடுவில் கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இம்மாதம் 28ஆம் திகதி இராமநாதன் கல்லூரியிலும் மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிகள் மார்ச்மாதம் 9 ஆம் திகதி இணுவில் சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் நடைபெறும்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

(க-9)

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி விளை. போட்டி

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி 17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

(க-70)

மக்கள் முகம்

## புதியநிர்வாகிகள்

சாவகச்சேரி, பெப் 15
சங்கத்தானை சாரதா சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. நாகராசா. உபதலைவர்: திரு. ரி. பூபாலசிங்கம், செயலாளர்: திரு. செ. சுப்பிரமணியம், உபசெயலாளர்: திரு. என். மகேந்திரன், பொருளாளர்: திரு. [illegible] [illegible]ஆகியோர் (க-21)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கனகரத்தினம் துரைசிங்கம்**
(விலைமதிப்பாளர், விலைமதிப்புத்திணைக்களம்)

தோற்றம்: 23 - 2 - 34
மறைவு: 15 - 2 - 83

ஏழு ஆண்டுகள் தான் மறைந்தாலும் உங்கள் நினைவை எம் நெஞ்சம் ஒரு போதும் மறந்ததில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகள், உறவினர்.

6 கந்தபுராண வீதி,
கந்தர்மடம். (2275)


## 31ஆம்நாள் கண்ணீர் அஞ்சலி



**S. சூசைப்பிள்ளை**
(றொபின் ஹாட்வெயர்ஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்)

தோற்றம்: 03 – 05 – 1931
மறைவு: 17 – 01 – 1990

கோடை இடி போன்று
கொண்டவன் நீர் எங்கு சென்றீர்
'கூ' வென்று நாங்கள் அழும்
கூக்குரல்தான் கேட்கலையா
அப்பா என்று அழைக்க
[illegible]மில்லை எங்களுக்கு
எம் தலைவா நீர் சென்ற இடம்
எங்கென்று தேடுகின்றோம்
எம் பெருமான் நிழலடியில்
உம் ஆன்மா சாந்திபெறும்.

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,யாழ்ப்பாண வாசியுமாகிய S. சூசைப்பிள்ளை என்பவர் 17 – 1 - 90 ல் இறைபதம் அடைந்தார். அவரின் இறுதிக் கிரிகைகளில் பங்குபற்றி அக்குடும்பத்திற்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நன்றி நவில்வதுடன் 16 – 02 - 90 வெள்ளி காலை 6. 00 மணியளவில் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**மனைவி, மக்கள்.**

40, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம். (1983)


# உடனடி வேலைவாய்ப்பு

## KUWAIT

[பிரபல போக்குவரத்துக் கம்பனியில் வேலைவாய்ப்பு]

| | | | |
|---|---|---|---|
| 1. | கனரக சாரதிகள் | 60 பேர் | 70 டினார் |
| 2. | சாதாரண வாகன சாரதிகள் | 40 பேர் | 55 டினார் |
| 3. | ரயர் பிற்றர் | 03 பேர் | 50 டினார் |
| 4. | பெண் செக்ரட்டறி | 01 ஆள் | 90 டினார் |
| 5. | டீசல் மெக்கானிக் | 05 பேர் | 90 டினார் |
| 6. | பெண் கிளீனேர்ஸ் | 50 பேர் | 30 டினார் |

ஒன்றரை மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம். கடவுச்சீட்டு 3 பாஸ்போட் சைஸ் படம், அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

மற்றும் குவைத் நாட்டிற்கு பணிப்பெண்களாக செல்வோருக்கு இரு வாரத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

வயது எல்லை ஆண்கள் 20—47 வரை
பெண்கள் 30—45 வரை

## SAUDI ARABIA

| | | |
|---|---|---|
| 1 | Cleaner | 400 SR |
| 2. | Plumber | 550 SR |
| 3. | Electrician | 550 SR |
| 4. | Carpenter | 550 SR |
| 5. | Civil Engineer | 1200 SR |
| 6. | Electric Engineer | 1700 SR |
| 7. | Telephone Technician | 1000 SR |
| 8. | Painter | 550 SR |
| 9. | Waiter | 375 SR |

கடவுச்சீட்டு, 3 படம் அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் எமது காரியாலயத்தோடு நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை 21 — 47 வரை

# TV Travels & Tourist

Front of Railway Station,
Brown Road,
KOKUVIL.

(C/3843)



இலங்கைப் பல்கலைக் கழகங்களின்

# ★வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்★

**கல்வியாண்டு 1990 / 91**

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவைகருதி வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்

## ஆரம்பம்: 18-02-1990

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B. A.) விஞ்ஞானமாணி (B. Sc.)
வர்த்தகமாணி (B. com.)

விண்ணப்பப்படிவங்களையும், விபரத்திரட்டினையும் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்

★ 2 மாத துரித மீட்டல் பயிற்சி வகுப்புகள் ★

## ஆரம்பம்: 18-02-90

● 1988 Dec 1989 Apr. நடைபெறவேண்டிய B. A, G. A. Q. பரீட்சைகள் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும். இவற்றிற்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு: **ASTAN INSTITUTE**

166/1, HOSPITAL ROAD, — JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ம் மாடி) [சி-3849]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் ஆபிரிக்கா

# பொருளாதாரத் தடை பற்றி அமெரிக்க நிலைப்பாடு!

வாஷிங்டன், பெப். 14

தென் ஆபிரிக்க அரசு மீதான பொருளாதாரத் தடைகளை அவசரப்பட்டு தற்போது நீக்குவதில்லை என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்த பின்னர் தென் ஆபிரிக்கா மீதான பொருளாதாரத் தடைகளை அகற்றும்படி பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் உலக நாடுகளைக் கேட்டிருந்தார்.

இதற்காக திருமதி மார்கரட் தாட்சரை பிரிட்டிஷ் தொழிற்கட்சி பலமாகக் கண்டித்திருக்கிறது.

நிறவேற்றுமை முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரை தென் ஆபிரிக்கா மீதான பொருளாதாரத் தடையை நீக்கவேண்டாம் என்று விடுதலையான பின்னர் திரு. மண்டேலாவும் உலக நாடுகளைக் கேட்டிருந்தார். (எ)

# ஐக்கிய ஜேர்மனியை உருவாக்க வல்லரசுகளிடையே உடன்பாடு

ஒட்டாவா, பெப் 14

ஜேர்மன் இணைப்புக் குறித்து நான்கு வல்லரசுகளுக்கும் கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு இடையே நடந்த மாநாட்டில் உடன்பாடு காணப்பட்டது.

கனடா தலைநகர் ஒட்டாவாவில் இந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதுபற்றி நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

ஜேர்மன் இணைப்பை இரண்டு கட்டங்களாக மேற்கொள்வது என்று இம் மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

**முதல்கட்டம்.**

கிழக்கு ஜேர்மனியில் பல அரசியல் கட்சிகள் போட்டியிடும் சுதந்திரப் பொதுத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி நடைபெறுகிறது.

அதன் பின்னர் கிழக்கு ஜேர்மன் அரசும் மேற்குஜேர்மன் அரசும் உள்நாட்டுப் பொருளாதார, அரசியல் சட்ட ரீதியான இணைப்புச் சம்பந்தமான பேச்சுக்களை நடத்த வேண்டும்.

முதல் கட்டமாக இது நடைபெற வேண்டும். அதன் பின்னர் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகும்,

**இரண்டாம் கட்டம்**

45 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பிரிட்டன். பிரான்ஸ் சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் வெற்றியீட்டின.

இந்த நாடுகள் ஒரு நாடாக இருந்த ஜேர்மன் நாட்டை இரண்டாகப் பங்குபோட்டுக் கொண்டன.

அமெரிக்கா தலைமையிலான அணியில் மேற்கு ஜேர்மனி சேர்ந்தது சோவியத் யூனியன் தலைமையிலான அணியில் கிழக்கு ஜேர்மனி சேர்ந்தது.

இணைப்பின் இரண்டாம் கட்டமாக அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் இரண்டு ஜேர்மனிகளும் இணைவதால் ஏற்படும் வெளியுறவுத் தொடர்புகள் பற்றி பேசி ஒரு முடிவுக்கும் வரும்.

இந்த இரண்டு கட்ட நடவடிக்கைகளும் திருப்திகரமாக நிறைவேறினால் மட்டுமே, ஐக்கிய ஜேர்மனி உருவாகும் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

# பல கட்சி ஜனநாயகம் கோரி நேபாளத்தில் வேலை நிறுத்தம்

காத்மண்டு, பெப். 14

நேபாளத்தில் தடைசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் பொதுவேலை நிறுத்தம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்திருக்கிறது. பல கட்சி அரசியல் முறை கோரி நடைபெறவுள்ள இந்த வேலை நிறுத்தத்தை இம்மாதம் 19 ஆம் திகதி நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

நேபாள காங்கிரஸும் இடதுசாரி கம்யூனிஸ்ட் அணியும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் அரசியல் கட்சிகள் மீதான 30 ஆண்டு காலதடையை எதிர்த்து கட்சிக் கொடிகளை 18 ஆம் திகதி முதல் பறக்கவிடுமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்கள் தொடரும் என்றும் மார்ச் 2 ஆம் திகதி இன்னொரு வேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இம் மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றப்பகிஷ்கரிப்பு இடம் பெறும் என்று சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

# அணுவிஞ்ஞானியின் மூளையில் ஆய்வு நடத்த ரஷ்யா முடிவு

நியூயோர்க், பெப். 14

காலஞ்சென்ற சோவியத் பௌதீக விஞ்ஞானி அன்ட்ரி சக்காரோவின் மூளையைத் துண்டு துண்டாக வெட்டி பரபின் திரவத்தில் ஆய்வுக்காக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக ''டைம்'' சஞ்சிகை அறிவித்திருக்கிறது.

சோவியத் விஞ்ஞானிகள் அக்கடமி இப் பரிசோதனையை நடத்தவிருக்கிறது.

மூளையின் அமைப்புக்கும் அந்த மூளைக்குரியவரின் விஞ்ஞான அறிவுக்கும் தொடர்பு உள்ளதா என்பதை அறிவதே இந்த ஆய்வின் நோக்கம் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பரில் சகாரோவ் மரணமானார். முதலாவது ஹைட்ரஜன் குண்டை சோவியத் யூனியனுக்காக 1953 இல் திரு. சகாரோவ் உருவாக்கினார்.

பின்னர் ஜனநாயக உரிமைகளுக்காக சோவியத் யூனியனில் இயக்கம் ஒன்றை ஆரம்பித்த இவருக்கு 1975 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

சோவியத் விஞ்ஞான அக்கடமி 1926 இல் ஆரம்பிக்கப்பட்டது. லெனின், ஸ்டாலின், மார்க்ஸிம் கோர்க்கி ஆகியோரின் மூளைகளையும் இந்த நிறுவனம் ஆய்வுசெய்துள்ளது. (எ)

## அமைச்சர் ராஜினாமா இஸ்ரவேல் நெருக்கடி

இஸ்ரவேல் அரசியலில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கூட்டணி அரசியல் அங்கம் வகிக்கும் லிகுட் கட்சியைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர் ஏரிஸ் ஷரோன் பதவி விலகியதைத் தொடர்ந்தே இந்த நெருக்கடி ஆரம்பித்தது.

இதனால் அரசில் அங்கம் வகிக்கும் மற்றக் கட்சியான தொழிற்கட்சி புதிய அமைச்சரவையை அமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நிலைமை தொடர்பான கருத்து வேறுபாடுகளே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

★ சினிமா டைரக்டர்

# ராஜேந்தர் மனைவி உஷா பழனி தொகுதியில் போட்டி

**தாயகம் மறுமலர்ச்சி கழக வேட்பாளராக**

திண்டுக்கல், பெப் 14

தமிழ் நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதியில் சினிமா டைரக்டரும் இயக்குநருமான டி. ராஜேந்தரின் மனைவி உஷா ராஜேந்தர் போட்டியிடுகிறார்.

திரு. ராஜேந்தரின் தாயக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் இவர் போட்டியிடுகிறார்.

தி. மு. க. வில் இருந்து வெளியேறிய பின்னர் திரு. ராஜேந்தர் தாயக மறுமலர்ச்சிக்கழகத்தை ஆரம்பித்தார். இக்கழகம் முதன் முறையாக பழனியில் தான் போட்டியிடுகிறது.

உஷா ராஜேந்தருக்கு குதிரை சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

தி. மு. க. இந்திரா காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி உட்பட 51 வேட்பாளர்கள் இத்தொகுதியில் போட்டியிடுகின்றனர். (எ)


யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான

**பொதுக்கூட்டம்**

திகதி: 18-02-1990 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் பி. ப — 1. 30
இடம்: பொண்ட் கல்வி நிறுவனம்,
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்தில் இது வரை பதிவு செய்த, பதிவு செய்யாத, யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களும், இத்துறையுடன் தொடர்பான அனைத்து ஆசிரியர்களும் இக் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

பிற்குறிப்பு: 18-02-1990 ஞாயிற்றுக்கிழமை, யாழ் மாவட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், பிற்பகல் வகுப்புக்களை நிறுத்தி, மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

இணைச் செயலாளர்கள்:
தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்.
(2541)



★ நம்பிக்கை
★ நாணயத்தின்
★ சின்னம் ⟹ ஷப்ரா

நிலையான முதலிடுகள் கீழ்க்கண்ட வட்டி விதங்களில் வரவேற்கப்படுகின்றன.




**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5.485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1 791.516 | 8,283.818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206.887 | 25.811.712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,876,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827.514 | 8.505,201 | 16,880,878 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372.825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1.356.206 | 1.372.825 | 2,330 012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

பணிப்பாளர் சபை:

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B (Lond) முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விபரங்களுக்கு:-

**ஷப்ரா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலை பேசி இல. 589310 & 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

New Science Academy
JAFFNA.
DAY CLASS
8. 30 a.m. — 10. 30 a.m.
★ Gunaseelan ★
PHYSIOLOGY
10. 30 a.m. — 12.30 p.m.
MORPHOLOGY
ஆரம்பம்: 19-02-90 — திங்கள்
(ஆரம்ப வகுப்பின் பின் அனுமதி இல்லை)

உதயன்

15 - 02 - 1990 வியாழக்கிழமை

New Science Academy
In Front of B.M.C. JAFFNA
DAY CLASS
★ ZOOLOGY ★
(GENETICS)
தங்கராஜா
Mon — Fri
2.30 p.m.

# யாழ். மாவட்டத்திற்கு நியமனம் பெறும் ஆசிரியர்

யாழ்ப்பாணம், பெப். 15 வெளி மாகாணங்களில் மாவட்ட ரீதியில் நியமனம் பெற்றுச் சேவை புரிந்த ஆசிரியர்கள் இப்போது தமிழ் மாவட்டங்களுக்கு இடமாற்ற நியமனம் செய்யப்பட்டுள்ளவர்.

இந்த வகையில் சப்ரகமுவ, மேற்கு, ஊவா, மத்திய, வட மத்திய, வட மேற்கு ஆகிய ஆறு மாகாணங்களில் சேவை புரிந்த 213 பேர் எட்டுத் தமிழ் மாவட்டங்களுக்கும் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம்-149, கிளிநொச்சி-4, வவுனியா-4, முல்லைத்தீவு-7, மன்னார்-9, மட்டக்களப்பு-17, திருகோணமலை-12, அம்பாறை-11 என்ற எண்ணிக்கையில் மாவட்ட (இடமாற்ற) நியமனம் அமைந்துள்ளது. 213 பேரின் முழுப் பெயர்ப் பட்டியலும் தொடர்ந்து உதயனில் பிரசுரிக்கப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வடமத்திய, சப்ரகமுவ, மேற்கு மாகாணங்களிலிருந்து நியமனம் பெறுவோரின் பட்டியலை முதற் தொகுதியாக இங்கு வெளியிடுகிறோம்.:-

**வட மத்தியில் இருந்து**

செல்வி ரத்தினேந்திரமலர் (ஹொறவப்பொத்தான), திருமதி இ. ஜெயராசா (அனுராதபுரம்), என். கனகசிங்கம் (சஹத்ககஸ் டிக்கிலியா), செல்வி ரீ. றாஹில் (சஹத்த கஸ்டிக்கிலியா).

**சப்ரகமுவாவில் இருந்து**

திருமதி சிவகலா ரத்னகோபால் (இரத்தினபுரி), செல்வி எஸ். முத்துக்குமாரசாமி (பலாங்கொடை), செல்வி ஆர். சிவலிங்கம் (பலாங்கொடை), திரு. கே. சுந்தரமூர்த்தி (இரத்தினபுரி).

**மேற்கு மாகாணத்தில் இருந்து**

செல்வி எம். சண்முகநாதன் (ராஜகிரிய), செல்வி ஜி. பழனித்துரை (ராஜகிரிய), திருமதி கே. சந்திரசேகரம் (ராஜகிரிய), செல்வி ஏ. சுப்பிரமணியம் (கொழும்பு), திருமதி எஸ்.தேவதாசன் (கொழும்பு) செல்வி கே. கோணேஸ்வரி (கொழும்பு), ஆர். குணநாதன் (கொழும்பு), செல்வி வி. அன்னராணி (மல்வான), கே. அருந்தவபாலன் (கொழும்பு). செல்வி கே. சோமசுந்தரம் (கொழும்பு).

[அ-க-3]

[நாளை தொடரும்]

யாழ் மத்திய கல்லூரி

புதிய கட்டட திறப்பு விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும்

17-02-1990 சனிக்கிழமை

திறப்பு விழா: காலை 8.30
பரிசளிப்பு விழா: பிற்பகல் 2.30

பிரதம அதிதி: செல்வி தி. பெரியதம்பி
யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

சிறப்பு அதிதிகள்: திரு. C. தியாகராஜா
யாழ் கோட்டக் கல்வியதிகாரி

திரு. K. இரத்தினம்
பொறியியலாளர்,
திட்ட முகாமைத்துவ அலுவலகம்

திரு. M. A. பிரான்சிஸ்
பொறியியலாளர் யாழ் கல்வித் திணைக்களம்

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யாழ் மத்திய கல்லூரி.
14 02-1990
(C/3857)

## மரண அறிவித்தல்

### திரு. சேவகப்பெருமாள் நாகரெத்தினம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சே. நாகரெத்தினம் அவர்கள் 14-02-90ல்காலமானார் இவர் மாரிமுத்துவின் அன்புக் கணவரும், திருமதி மகேஸ்வரியின் அன்புத்தந்தையும், திரு.குணசிங்கத்தின் அன்புமாமனும் (எவர்ஷைன் மெற்றல் உரிமையாளர்) திருமதி தாமரைச்செல்வி ராஜேந்திரன் (சுவிற்ஸலாந்து) அருள்மொழி (B. A), இளங்குமரன் (க. பொ. த. உயர்தரம்) தேன்மொழி (க. பொ. த. உயர்தரம் ஸ்ரீவள்ளி (சுவிற்ஸலாந்து) கார்த்திகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், பிரணவன் (சுவிற்ஸ்) அவர்களின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குணசிங்கம்
16/2, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

(1986)

## விஞ்ஞான பீட இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 15 யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சைகள் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

இதே வேளை விஞ்ஞான பீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் மே மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

## மீண்டும் இறைவரிப் பகுதி

யாழ்ப்பாணம், பெப். 15 யாழ். அரசாங்க செயலகத்தில் பல வருடங்களாக இயங்காது இருந்த இறைவரித் திணைக்களத்தை மீண்டும் செயற்பட வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் அளவில் இத்திணைக்களம் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-3)

### ரூபா 200---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கசேவையில் உள்ள ஊழியர்களுக்கு ஜனவரியில் இருந்து 200 ரூபா சம்பள அதிகரிப்பை அரசு அறிவித்திருந்தது.

எனினும் யாழ் மாவட்டத்தில் உள்ள சில திணைக்களங்கள் மேற்படி சம்பள அதிகரிப்பை ஜனவரி மாதத்தில் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-10)

### வைத்திய--:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு நடந்த பட்டமளிப்பு விழாவின்போது வைத்திய பீடமாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் முடியாததன் காரணமாக அவர்களுக்கான பட்டமளிப்பு இடம் பெறவில்லை.

(ஒ-10)

## கம்பித் திருட . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி))

தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. ஆனால் உரிய பாவனையாளர் தொலைபேசிகளுக்குத் தொடுக்க முடியவில்லை!!

பரிவர்த்தனை நிலையத்திலிருந்து கொழும்புக்குத் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனால் பாவனையாளர்கள் தமது தொலைபேசி மூலம் பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்புகொள்ள முடியவில்லை.

பிரதான பகுதியில் கம்பிகள் வெட்டப்பட்டுவிட்டதால்; எந்தக் கம்பி எந்த லைன்; எந்த லைன் எந்தத் தொலைபேசிக்கு என்று சிக்கல் களைந்து, கண்டுபிடித்து, திரும்பத் தொடுக்க மூன்று நாட்களுக்கு மேல் செல்லும் என்று தொலைத் தொடர்புப் பகுதி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

எல்லாம் கம்பித்திருடனால் வந்த வினை, ஐயகோ! (அ)

பிந்திய தகவல்: சம்பந்தப்பட்ட கம்பித் திருடன் சிலரால் பிடிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

### எப்போதிருந்து---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடத்து (1990) க்கு உரிய பத்திரம் வழங்க வேண்டும் என்று கூறுகிறது.

இந்த வரிமூலம் கிடைக்கும் பணத்தை மாகாணசபைக்கு வழங்க மோட்டார்த்திணைக்களம் ஒப்புதல் அளித்துள்ளது. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எந்தக் காலம் முதல் வரி அறவிடவேண்டும் என்ற விடயம் குறித்து எழுந்துள்ள முரண்பாட்டை [illegible] இரு சாராருக்கும் இடையில் பேச்சுக்கள் [illegible] இன்றன.

(அ-3)

# யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்

யாழ்ப்பாணம், பெப் 15 ஆறு வெளி மாகாணங்களில் பணிபுரிந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தமிழ் மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளவர்களின் விவரம் வெளியாகி உள்ளது.

சப்ரகுவ, மேற்கு, ஊவா மத்திய வடமத்திய, வட மேற்கு மாகாணங்களில் இருந்துஆறுதமிழ் மாவட்டங்களுக்கும்மொத்தம்59பேர்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு 32 பேரும், கிளிநொச்சிக்கு ஒருவரும், மன்னாருக்கு ஒருவரும், வவுனியாவுக்கு ஒருவரும். திருகோணமலைக்கு மூவரும், மட்டக்களப்புக்கு 21 பேரும் என்ற எண்ணிக்கையில் இடமாற்றம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மூன்று மாகாணங்களில் இருந்து இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் பட்டியலை இன்று முதலாவது பகுதியாக வெளியிடுகிறோம்.

**வடமத்தியில் இருந்து**

சி.வி. சிவகாமி(மதவாச்சி) எஸ். நடராசா (கம்பிறிகஸ்வேவா), ஏ.சி. சாகுல்ஹமீத் (மஹாமல் கொல்லாவா).

**சப்ரகமுவாவில் இருந்து**

எம். அருள்ராஜன் (மாவனெல்ல), வீ. ராசரத்தினம் (மாவனெல்ல, திருமதி எஸ். சுதாகரி (மாவனெல்ல)

**மேற்கில் இருந்து**

டி. எச். ஜே. எதிர்மனசிங்கி (கொழும்பு), திருமதி. வி. லோகநாதன் (கொழும்பு) கே. சிறீ கதிர்காம சம்பந்தர் (அவிசாவல), சகோ. அதெல்லிவா (கொழும்பு), திருமதி. எஸ். எல். சற்குணராசா (கொழும்பு), திருமதி. ஜே. பி. மொஹமத் (கொழும்பு), திருமதி. ஏ. தர்மலிங்கம் (கொழும்பு), திருமதி. ஆர். ஸ்டீபன்ஸ் (கொழும்பு), எம். சிவநாதன் (வத்தளை), கே. சிவசுப்பிரமணியம் (பாணந்துறை).

ஏனைய மூன்று மாகாணங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் பட்டியல் நாளை வெளிவரும்).

(அ - க- 3)

## தலைநகர் கொழும்பில் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களில் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டுமன்றி ஏனைய தமிழ்ப் பகுதிகளில் இருந்தும் சென்றவர்களே இந்த தமிழ் இளைஞர்கள்.

இவர்களில் அனேகர் தரகர்களிடம் பணம் கொடுத்து இழந்த நிலையிலும் போலி ஏஜென்ஸிகளை நம்பி பணத்தைப் பறிகொடுத்தவர்களும் என்று பல விதங்களில் ஏமாற்றப்பட்டவர்கள்ஆவர்.

இவற்றால் இடிந்து போய் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த இளைஞர்களை மேலும்மிதித்து பணம்பறித்து வருகிறது ஒரு கும்பல்.

தமிழ் இளைஞர்கள் தங்கி இருக்கும் விடுதிகளை நடத்துபவர்களில் ஒரு சிலர் அல்லது அவர்களது கையாட்களே அந்த மோசடியில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட இளைஞர்கள் பற்றி பொலிசாருக்குத் தவறான தகவல்களைக் கொடுத்து, அவர்களை இக்கட்டில் மாட்டி வைத்துவிட்டு பின்னர் அவர்களை விடுவிக்க உதவுவதாகக் கூறிப் பணம் பறிப்பதே அந்தக் கைங்கரியம்.

பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுவதாகக் காட்டி இளைஞர்களிடமும், அவர்கள் உறவினர்களிடமும் பணம் பறிக்கிறது இந்த மோசடிக் கும்பல்கள்.

(ஒ)

## கிளிநொச்சியில் 'தமிழ் ஓசை'

கிளிநொச்சி, பெப் 15 கிளிநொச்சி கலை, கலாசாரப் பிரிவு 'தமிழ் ஓசை' என்னும் ஒலிபரப்பு வர்த்தக விளம்பர சேவையை இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கிறது,

இந்தச் சேவை மூலம் கிடைக்கும் பணம் தாயகத்தில் அழிந்து சிதைந்துபோன கலை கலாசாரங்களை மீட்பதற்கு பயன்படுத்தப்படும்.

(ஒ-71)

## சட்ட விரோதக் குழு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளார்.

அரசகங்கம் ஏற்றுக்கொண்டுள்ள ஆணைக்குழு சிபார்சுகள் வருமாறு:—

★ அரசுக்குஎதிராகஆயுதப் போராட்டத்தைத் தொடுத்தவர்கள் சரணடைவதற்குரிய நம்பிக்கைச் சூழ்நிலையை ஏற்படுத்த சுதந்திரமான சரணடைவுக் குழு நிறுவது.

★ நாசகார சக்திகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இராணுவமும் பொலீஸாரும் (சரணடைவுக்குழு நிறுவப் பட்டவுடன்) நிறுத்திக்கொள்வது.

★ அவசரகாலச் சட்டத்தைக் கூடுமான விரைவில் நீக்கவேண்டும்.

★ சட்டவிரோதமான இராணுவக் குழுக்களையும் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களையும் நிராயுதபாணிகளாக்க அவசர நடவடிக்கை எடுப்பது.

★ அரசியல் தலையீடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது.

★ அரசியல் கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் உள்ள ஆசனங்களின் அடிப்படையில் விகிதாசார முறையில் 10 உறுப்பினர்களைக் கொண்ட நியமன ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். இ[illegible] நீதியரசர், கணக்காளர் நாயகம் ஆகியோர் வாக்களி[illegible]க்கும் உரிமையற்ற உறுப்பினர்களாக இருப்பர்.

★ பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வது போட்டிப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை வாயிலாக விண்ணப்பதாரி விரும்பும் மொழியில் நடத்தப்படவேண்டும்.

★ அரசியல் சார்பற்ற கிராம மட்ட நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக அமைச்சுக்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

★ அரசியல்வாதிகளுக்கு என ஒழுக்க நெறிக் கோவை ஒன்று கொண்டுவரப்பட வேண்டும்.

மொழிக் கொள்கையில் அரசு ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகள் வருமாறு:-

★ மொழி ரீதியான பாகுபாட்டைத் தடுப்பதற்கு விரிவான அதிகாரமுடைய அரசகரும மொழி ஆணைக் குழு நியமிக்கப்பட வேண்டும்.

★ 3 ஆம் தரத்தில் இருந்து ஆங்கிலத்தைக்கட்டாய பாடமாக்குவது,

★ தமிழ் மாணவருக்கு சிங்களத்தையும் சிங்கள மாணவருக்கு தமிழ் மொழியையும் போதிப்பது என்ற சிபார்சை 1991 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவது. [அ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திரு. சுப்பையா நாகராசா

(பொலிஸ் சார்ஜன்ட் யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 683 A மானிப்பாய் வீதி ஒட்டுமடத்தில் வசிக்கும் சுப்பையா நாகராசா 14-02-1990 புதன்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பையா காலஞ்சென்ற குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்டபுத்திரனும் தங்கமணிப்பிள்ளையின் அன்புக்கணவரும் சுதர்சனி (Holy Family Convent Jaffna) முருகதாசன் (யாழ். மத்திய கல்லூரி) பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி, அரியமலர், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரட்ணம், அருமைரத்தினம், சிவராசா, பாலகிருஸ்ணன் பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற கோபாலகமலாம்பிகை, பாக்கியலட்சுமி இராமநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக 15-02-90 (வியாழன்) இன்று காலை 10-00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

683A, மானிப்பாய் வீதி.
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(11802)

## சதாசிவம் கந்தசாமி

கொக்குவிலைச் சேர்ந்தவரும், நீர்கொழும்பில் வசித்தவரும், நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், சமாதான நீதவானுமாகிய சதாசிவம் கந்தசாமி 06-02-1990 அன்று நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் லக்சுமியின் அன்புக் கணவரும், குகநேசன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), லோகினி, சிவநேசன், பத்மநேசன் (சுவிற்சலாந்து), பத்மினி (ஜேர்மனி), சதாநேசன் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நிர்வாகி, பெரடெனியா இன்ஸ்ரிரியூட், கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்திராங்கி, சத்தியநாதன் (சவூதி அரேபியா), தவயோகராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-02-1990 அன்று நீர்கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

''யோகஸ்தான்''
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[2542]

## திரு. ச.கு. அம்பலவாணபிள்ளை

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. ச. கு. அம்பலவாணபிள்ளை 14-02-90 புதன்கிழமை காலமானார். இவர் இளைப்பாறிய பிரதான புகையிரத நிலைய அதிபரும், தும்பளை, நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலய தர்மபரிபாலன சபை தலைவருமாவார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராதாகிருஷ்ணன் (டென்மார்க்) Dr. சண்முகவடிவேல் (கனடா), இலட்சுமிகாந்தன், சீதாராம், கோபிநாத் (விவசாயப் போதனாசிரியர், கிளிநொச்சி) வள்ளிநாயகி வியேந்திரநாத் (சம்பியா), இராசகோபால் (டென்மார்க்),பாமாவிஜயன், மதிவண்ணன் (யாழ் மருத்துவக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.வியேந்திரநாத் (சம்பியா) அவர்களின் மாமனாரும், வியேந்திரா (பொறியியலாளர்,சைபான்) வின் சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 15-02-90 இன்று வியாழக்கிழமை காலை 9. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைறெும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

தும்பளை, பருத்தித்துறை.

(2535)

## சின்னையா நாகையா

சின்னையா நாகையா காலமாகிவிட்டார். இவர் யாழ் கொட்டடியை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு கொம்மேர்ஜல் கம்பெனியின் பொறியியலாளருமான நாகையா அவர்கள் 13-02-90 செவ்வாய்க்கிழமை அன்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

இவர் சாரதாவின் அன்புக் கணவரும், பாலசங்கர், சாந்தினி, குமரன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் முருகேசு சின்னையா, யோகம்மா தம்பதிகளின் மூத்த மகனும், முன்னாள் பண்டாரவளை ஊவாடிக்கராவ தோட்ட உரிமையாளர் திரு. சு. அருணாஜலம் திருமதி மீனாட்சி அம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி நாகேஸ்வரி இராஜசிங்கம், டாக்டர் சண்முகநாதன் ஆகியோரின் பிரிய சகோதரனும், ஆனந்தராஜா (கணக்காளர்) வைத்திய கலாநிதி மகேந்திரராஜா, திருமதி சறோஜாதேவி நச்சினார்க்கினியன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு. அருணாஜலம்
''பழமுதிர்சோலை,
பொற்பதி றோட்,
கொக்குவில்.

(1985)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15 - 2 - 1990 இல் வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org